[illegible]

இதுகாறும் கூறிப்போந்த நியாயங்களான் காரணமொன்றே முக்காலத்தினு முளதென்பதூஉங் காரியமங்ஙனமில்லதென்பதூஉம், அஃதுஞ் சொன்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமாமென்பதூஉங் கூறினும் இதனுனே மண் யாண்டு முளதென்றுங் கடம் யாண்டுமிலதென்றுந் துணியப்பட்டதென்க.

ஒரு பொருளுளதாகவேண்டின் முன்னரில்லாதிருந்தே நிகழவேண்டும். இல்லாதிருந்தது இறந்தகாலத்ததாம்; உளதாவது நிகழ்காலத்ததாம். இறப்பு நிகழ்வு மொன்றெனப்படா. அங்ஙனமாகாதவழி இன்மையாய காலமும் உண்மையாய காலமும் வேறுமன்றே; ஒரேஞான் றின்மையு முண்மையுமாதலியையா. கடத்தோற்ற முளதாமிடத்துக் கடமிருந்து தோன்றிற்று? இல்லாது நிகழ்ந்ததா? என்றுசங்கை நிகழும். ஆண்டை நிகழ்ந்தவழி யிருந்தே நிகழ்ந்ததெனின் இருந்தது தோன்றுவதற்கிடனின்றே; இல்லாததே தோன்றிற்றெனின் இன்மையு முண்மையுங் காலவேறுபாடெய்தலின் நிகழ்வின்க ணின்மையு முண்மையுங் கூடா. இப்பெற்றியாற் பொருடோன்றற் கிடனின்று. ஒருபொருளழிவுபாடெய்தவேண்டின் உள்ள தொருபோது மழிவுபா டொருபோதுமாதலியையும். அழியுஞான்று இருந்ததழிந்ததா? இல்லாததழிந்ததா? என்ற இக்கடாவினுக் கிருந்ததழிந்ததென்றே விடை கூறவேண்டும். இருப்பதாய வுண்மையும் அழிவதாயவின்மையும் ஒரேஞான்றியையா. இதனுனே உள்பொருளழிதற்கிடனின்று. "இல்லது வாராது உள்ளது போகாது,, என்னு நியாயமே ஈண்டைச்சாலும்.

காரியமான கடம் அசத்தேனுங் காரணமாய மண்ணேனுஞ் சத்தென்பாமே யெனின் கூறுதும் —எது காரணமெனப்படுமோ அது காரியப்படவேண்டும். ஆடைக்கு நூல் காரணமேனும் பஞ்சினுக் கந்நூல் காரியமாகும். அங்ஙனமே கடத்துக்கு மண் காரணமேனும் அம்மண்ணுந் தன் காரணமாய வணுக்களுக்குக் காரியமாம். காரியமென்பதனைத்து மெக்காலத்து மின்றென்றிதுகாறுங் கூறிப்போந்தாமாகலின் அம்மண்ணும் அசத்தெனப்படு மென்க.

காரியமாகவேனுங் காரணமாகவேனு முள்ளதியாதோ அஃதே யுண்மையாயுள்ளது; அஃதே சத்தெனின் காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருந்தியாதோ அஃது காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருக்கவேண்டும். காரியமெனின் முக்காலத்து மின்றென்று துணியப்பட்டதென்க. யாது காரணமெனப்படுமோ வஃது காரணமாகவேயிராது வேறொன்றனுக்குக் காரியப்பட்டு அசத்தென்னும் பெயரெய்துகின்றது. காரியகாரணஞ் சங்கிலித்தொடர்பேபோன்று முடிவின்றி நிற்குமெனின் அஃதுங் காரிய காரணத்தினடங்கி அசத்தெனப்படுமென்க.

பரமாணு அழிவின்றி யெஞ்ஞான்று நின்று காரியப்பட்டு மீண்டு மழிந்து காரணமாகவே யிருக்கும் அஃது காரியப்படுவதின்று; எஞ்ஞான்றுங் காரணமாகவே யிருப்பதொன்றுமாகலின் அனைத்துங் காரியப்பட்டு அஃதொன்றுங் காரியப்படாதெனக் கோடற்கெனைத்துமே நியாயம் புலப்படுவதன்று. அஃதே காரணமாமெனின் ஓர் பரமாணுவினோடு வேறோர் ப்ரமா

ப்ரம்மவித்தியா

அநுபந்தம்.

புத்தகம் - ௧.] ௧௮௮௭ - ஹு ஜனவரி-மீ ௩௰. [இலக்கம் - ௮.

விடை கூறல்.

"உலகம் சத்தா? அசத்தா? என்பது." இவ்விடயத்தினைச்சுட்டி முன்னர் சுதேசமித்திரனிலும், பின்னர் பிரமவித்தையினும் வரைந்திருந்தாம். அதனை "ஹிதோபதேசியார்,, என்னும் நமது நண்பரொருவர் "தத்துவவிவேசினி,, என்னும் பத்திரிகையின்கண் தமக்குத்தோன்றியாங்கு பொறித்து விளக்கினர். அதனை 1886-ஹு அக்டோபர் மீ 30-உ பிரசுரமான பிரமவித்தையின்கண்ணும் காண்க. இனியெமக்குப்போந்தவாறு நிறுத்துவான் பின் வருமாறு வரைகின்றாம்:—

உலகம் சத்தா? அசத்தா? என்புழி யீண்டையுலகவிலக்கணமெனைத்துணையும் கூறலில்லாது ஏனையவிரண்டற்கு மிலக்கணமுணர்த்தியதெம்மாட்டுக்குற்றமென்றுணர்த்திய பின்னர், அவ்விலக்கணமுணர்த்திய தொடங்கும் தாமேனும் அம்மூன்றனுக்கு நன்குணர்த்தினரா? இன்றே. இவர் உலகினிலக்கணமே சத்துக்குமென்பதன்றி யுலகவிலக்கணமும் குருத்துவமுதலிய சில குணங்களையுடைய உண்மைப்பொருளே யென்றனர். அவ்விலக்கணத்தின்பா லுண்மைப்பொருளெனச் சேர்த்தற்குக் காரணம் யாதோ அறிந்திலமென்க. இவ்வாறு இலக்கணங்கூறிப்போந்து அதனையே சத்தெனக்கொண்டு இதனுனே தாமிம்மூன்றனுக்கு மிலக்கண முணர்த்தியதூஉம் சாலவியக்கற்பாற்றேயாம்.

உலகம், சத்து என்னு மிரண்டனுள் ஒன்றனுக்கிலக்கணமுணர்த்தி மற்றொன்றனை யிவருங் கூறுதொழிந்தனர். யாமுமவ்வாறே கூறுதொழிந்தாம். இதனுனே நம்பால் யாது குறைவு? இன்னோர்க்கஃதேனின்று? இவர் உலகமே சத்து, சத்தேயுலக மென்றன்றே வுணர்த்தினரெனின் அஃதூஉமியையுடைத்தன்றென்க. அஃதங்ஙனமேல் இவ்வாசங்கை யாங்ஙன நிகழும்? கடம், கலசமா? படமா? என்றோ ராசங்கை யுளதேலஃதியையும். இவர் எடுத்துக்காட்டிய நிலக்கரி உலோகமா? கல்லா? என்னு மாசங்கையின்கண் நிலக்கரியென்பதூஉம், உலோகமென்பதூஉம் பரியாயபதமன்றே! இவற்றுள் ஒன்று சாமானியமும், மற்றொன்று விசேடமுமாமென்க. ஈண்டங்ஙனமின்றி யிரண்டுமொரோவொருபொருள் கருதிய தெனக்கூறி, மீண்டுங் கூறியதுகூற லென்னுங்குற்றத்திற் கிடனுகாதியாங்ஙனந் தப்புவர்?

உலகமென்னுஞ்சொற்பொருளை நன்காராய்ந்துழி அஃது காணப்படுவதென்னும் பொருட்டதாகலின் காணப்படுவதென்பதற் குல‍மென்ப தியையும். இன்னோர் நையாயிகநூல்வல்லுனர்போன்று வரைந்தனரேயல்லது சத்தநூல் வல்லார்போன்றல்லர். இஃதியாங்ஙனமெனின் காட்டுதும்:—

உலகமென்னுஞ் சொல் (லோக்) காண்டலெனப் பொருள்படும் வடமொழிப்பகுதியென்றுய்த்துணர்வரேல் உலகமென்பதுண்மைப்பொருளென் றெவ்வாற்றானுங் கூறத் துணியார். இனி உலகமெனினும் திரிசியமெனினு மொக்கும். உலகமென்னும் பதார்த்த வியல்பினை நன்குணர்ந்துகொள்ளு நிலையினன்றேயிவ்வாசங்கை யெழும்? அதனுனே யிவ்வாசங்கையின் விடயமானவிரண்டுதன்மைகளையும் உணர்த்துவான் வேண்டியதேயின்றியமையாமையுடைத்தென் பதுகருதி யிவ்விரண்டினுக்கேயிலக்கணம் பரக்கக்காட்டினும். சத்து,அசத்தென்னு மிவ்விருசொற்களுக்கும் பொருள், உள் பொருளினையும் இல் பொருளினையுமே யுணர்த்தினமையே சாலுமென்பதனை வடநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. அங்ஙனமுணரமாட்டாமையானே கடமென்னும்பெயர் தமிழ்நாட்டாரிட்டுவழங்குவதெனக் கூறியுள்ளார்.

"உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கெனவோர் சொருபமின்றி முக்காலத்து நிகழு மெல்லாச்சொருபங்களுந்தாமாய்க் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவு முதலியவற்றை யபின்னமா யாண்டுமுடைய வுண்மைப்பொருள். இதுவே சத்தென்றுஞ் சொல்லப்படும்,, எனக் கூறினர். உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென்றோர் சொருபமிலதென்று கூறிப் போந்த இவரே மீண்டும் எல்லாச் சொருபங்களுந்தாமாயெனமுரணிக் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவுமுதலியவற்றை யபின்னமாகவுடைய வுண்மைப்பொருளென்றனர். உண்மைப்பொரு ளிஃதென வெள்ளிடை மலைபோல விளக்காது குருத்துவமுதலனவற்றை வாளா கூறியதனுற் போந்த பயனென்னை? இதுவே சத்தென்றும் சொல்லப்படு மென்பதனுள் இது வென்னுஞ் சுட்டெதன்மேற்று? அச்சுட்டினை யேற்கும் பொருளின்னதெனக் குறிப்பதற் கெனைத்துணையும் வகையின்றே! இதற்கியாதுகூறுவதெனக்கடாவியொழிக. "இந்தச் சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும், அசத்து யாண்டுமிலதாதலாலும், இல்பொருளுக்கிலக்கணமு மின்றென்க,, என்றனர். சத்து இனைத்தென்றுணர்த்தாமே சத்தினபாவம் அசத்தென்றதூஉம், அசத்து யாண்டுமிலதென்றதூஉம், இல்பொருளிற் கிலக்கண மின்றென்றதூஉம் பயனில் கூற்றேயா மென்றொழிக. இது நிற்க;

இலக்கணக்குற்றஞ் சிலவெடுத்துக்கூறுவான்றொடங்கி இல்பொருளுக்கியையுமா வெனககூறினர்; அற்றேல் தாங்கற்ற தருக்கநூலில் அபாவ நான்கு மெற்றுக்கு மறந்தனரோ அஃதுணர்கின்றிலம். அற்றேல் அஃதாக.

இனி இலக்கணக்குற்ற மெடுத்துரைக்கப் போந்து இலக்கியங் காட்டி நிறுத்திய தமைவுடைத்தன் றென்றனர். அஃது நன்று! நன்று!! இதுநிற்க. சத்துக்குதாரணங் காட்டியதூஉம் போலி யென்றனர். அந்தோ! வியவகாரிக சத்து வாயிலாகப்

பாரமார்த்திகசத்தைஉணர்த்துவான் அங்ஙனமுரைத்ததல்லது உள்ளவாறு சத்தெனப்படுவது பிரமமேனும், விவகாரத்திற் காட்டுவான் றொடங்கிய இதனைக்காட்டிநிறுத்தியதூஉமென்க-

காரணகாரியங்களெனைத்தினுக்கு மூலமாயுள்ளது உலகப் பொருள்; அதனையே சத்தெனத்துணிந்தவர் இங்ஙனமே யன்று கடம் சத்தெனப்படுவதென்றனர்; யாம் கூறியாங் கஃது சத்தாகாதேனும் இவருரைத்தவாற்றான் சத்தாக வியைவதியான்டையதென்க. இனி "உற்பத்தியாவது முதற்காரண மில்லாமதுண்டாவது,, என்றுரைத்துப் பிறண்டும் "உற்பத்திக்கும் உருமாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்றனர்,, என்றனர்; இஃது நன்று! நன்று!! எம்மை வசை கூறுவானிப்புது விதி புனைந்ததூஉமன்றி "வைதிகர்கள் சிருட்டியென்றுங்கூறுவர்,, என்றனர். இனி இவர் வரைந்த நூலினைக்கற்கப்புகுவார் அங்ஙனங்கோட லமையும். இவர் கற்றுணர்ந்த தருக்கநூலின்கண் உற்பத்திக் கிலக்கணம் முதற்காரணத்திற் றோன்றும் பொருள் முதற்கணத்தோடியையுடைத் தென்றன்று இயம்புந்தகைமைத்து? கணமென்பது (ஓர்காலநுட்பப்பகுதி) என்க-

கடமோருருவிற்குப்பெய ரென்றனராகலின் கடம் குணப்பெயரேயல்லது பொருட்பெயராத லெத்துணையு மியையாதென்க- அற்றேல் கடத்தைக் கொண்டுவா, கடத்தின்கணீரிருக்கின்றது இன்ன விவகாரங்க ளெவ்வாற்றானியையும்? உருவங்குணமாகலின் அதற்குத் தொழிலின்று- அஃது நீரிருப்பதற்கெவ்வாற்றானுதாரமெனற்பாலது? இவர், நாம் கூறிய இலக்கணத்தின்கண் வியாத்திதோடமுண்டென முன்னர்க்காட்டமுயன்று அத்தோடங்களைத்தாமறிந்ததுணையும் எடுத்துக்காட்டியும் இறுதியின்கண் எனைத்துணையும் பயன்படாது சென்றமையின் யாதோ சில கூறி விடுத்தனர்- சர்வவிரோதம் யாண்டுமுள்ளது ஒருபோது மில்லது என்றும், பாரிசேடவிரோதம் யாண்டுமுள்ளது யாண்டுமில்லது என்றும் இரண்டனுள்ளும் முற்கூறிய விரோதம் விசேடமென்றும், பின்னருரைத்தமை சாமானியமென்றும் கூறி, யாம் கூறிப்போந்தமையைச் சாமானியத்துளடக்கினர்- இவர் கூறியாங்கு முதல் விரோதத்தினுக்கும் மற்றொன்றினுக்கும் ஒருபோதுமென்னும் பதமும் அதன் பரியாயமாகிய யாண்டு மென்றதூஉம் சொன்மாத்திரையான் வேறுபாடுடையதேனும் பொருள்மாத்திரையான் யாங்ஙனம் வேறுபாடுடையதெனக் கடாவியொழிக- இன்னோரன்னவற்றை யிவரே நன்குணர்த்தவல்லுனர் போலும்- யாண்டும் வியாத்திதோடமென்பதனை மறவியின்றிக்கூறு மாற்றலுடையாராகலின் எந்நூலுள் எவ்வாசிரியர் கூறியுள்ளாரென்றையுறுவார்க்கு அதனைத் தெற்றென்றுணர்த்துவ ரென்க.

"நையாயிக ரெல்லாரும் 'ஒன்றைக்காரணமென்றும், மற்றொன்றைக் காரியமென்றும் குறிப்பது சொரூபத்தை நோக்கியேயல்லாமல் வஸ்துவை நோக்கியல்ல,, வென்றும் காரணம், காரியம் இவ்விரண்டு மனோபாவனை யென்றுங் கூறிப் போந்தனர்- இதனானே வஸ்து சொரூப மன்றென்பதுவே திண்ணமென்றன்றோ புலப்படுகின்றது? இது நிற்க- வஸ்து தனக்கெனச்சொரூப மின்றென முன்னர்க்கூறிப்போந்து பின்னர் சொரூபத்திற்கே காரணமென்றுங் காரியமென்றுங் கூறிய தெற்றிற்கென்க- "மனோபாவனையால் காரணத்தை நோக்குழிக்காரியமும், காரியத்தை நோக்குழிக்காரணமும் இன்மையாகக்காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ள தெதுவோ அது எக்காலத்துமுள்ளதே, அதுவே சத்தென்பதும் வஸ்துவென்பதும் உலகமென்பதுமாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை,, என்றனர்- காரியமும் காரணமு மனோபாவனை யெனக்கூறிய வாற்றான் வஸ்துவின்கண் காரியமுங் காரணமு மின்றென்றே துணிபு- காரணத்தை நோக்குங்காற் காரியமென்ப தின்மையேனுங் காரியத்தை நோக்குங்காற் காரணமின்றென்றியாங்ஙனங் கூறற்பாற்று? மண்ணை நோக்குங்காற் கடமென்ப தின்மையேனுங் கடத்தை நோக்குங்கான் மண்ணென்ப தியாங்ஙன மின்மையாம்? "வஸ்துவோ காரணத்திற்கும் காரியத்திற்கு நியதமாயிருப்பது,, என்றுங் கூறியுள்ளார்- அவ்வஸ்து காரியமா? காரணமா? இரண்டி னொன்றாகற்பாலதே துணிபு- காரியமெனின் அதற்குமோர் காரண முளதாதல்வேண்டும்- காரணமெனின் அஃது மற்றொன்றினுக்குக் காரியப்படல் வேண்டும்- இங்ஙன முடிபின்றிப்போதரலின் எல்லையின்மையென்னும் அனவத்தாதோடமெய்தும்- யாம் ஆண்டை அணுகாரணவாதமறுப்பு நன்குணர்த்தினமாகலி னிவர் இறுதியின்கண் பொருளின்னதெனக் கூறிற்றிலர்-

இனி "உருத்திரிதலாவது ஒருரு மற்றோருருவாய்த் திரிதல் இதற்குதாரணங் கடமே,, என்றும், "கடவுருவமாறினு மண் மாறாது,, என்றுமுரைத்தனர்- உருவென்பது குணம்; மண்ணின்கண் யாதுகுண நிகழ்ந்தது? வளைதல், குவிதன் முதலனவெனின் எம்மண் அக்குணங்களையெய்திற்று? எனைத்துந் தலைப்பெய்தெனின் தனித்தனி மண்ணும் அக்குணத்தைச் சிறிது சிறிதேனுமெய்தினன்றிக் கூறற்பாற்றன்று- காரிய மாறினும் காரணமாறாதென்பதனான் வஸ்துவாகிய மண் மாறாதென்றனர்- யாது காரணமெனப்படுமோ அஃது மற்றொன்றினுக்குக் காரியமெனப்படுமே- இங்ஙனமாகலின் அழிவுபாடெய்தாக் காரணம் யாது? அக்காரணத்திற் குறுப்புளதா? இலதா? உளதாயின் காரணமெனக்கூறற் பாற்றன்று- இலதேல் காரியமாதற் கியைபுடைத்தன்று. இது நிற்க:—

"வனைந்த பின்னும் அழிவுபாட்டிற்குமுன்னுங் கடமுண்டாதலால் கடம் யாண்டுமில்லதா யெங்ஙனமாகும்? கடம் யாண்டு மில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்?,, என்றனர்- அற்றேல் வனைந்த பின்னரும் அழிவுபாட்டிற்குமுன்னருங் கடமுளதென் றிவர்க்கியாவர் கூறியுள்ளார்? யாம் அங்ஙனம் இதுகாறுங் கூறிப்போந்தோமல்லேம்- பெயர்த்தும் யாம் வரைந்ததனைச் சிறிது நோக்குங்காலஃது பூர்வபக்கத்தவர் துணிபென்றுணர்ந்து "கடம் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சங்கர சங்கேத நிலையினிற்கின்றது,, என் றெம்பாற் கூறிப்போந்ததுற்ற வெனைத்துணையுங் குற்றமன்றெனத் தாமே தெரிப்பர்.

இனி, இவர் முன்னர்க்கூறிப்போந்தவுலகவிலக்கணம் வேறு; இறுதிக்கட் கூறிப்போந்த வுலகமென்னுஞ் சொற்பொருள் வேறு- அஃதாகலினன்றே தெள்ளிதி னோர்ந்துணர்வாராக.

இந்து.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்

புத்தகம் க.] கஅஅஎ௵ பிப்ரவரி மீ உஅ- [இலக்கம்- கூ

சிதம்பரமும் ஜுபிலித்திருநாளும்

ஐயா,—சென்ற பிப்ரவரி௴ ௧௬ உ நமது இந்தியா சக்கிரவர்த்தனியார் அரசாட்சியின் ஐம்பதாவது வருஷபூர்த்தி உற்சவம் இந்த ஊரில் மிகச்சிறப்பாய் நடந்தேறியது. ஒவ்வொரு ஜனங்களும் மிகவானந்தத்தோடு ஷெ உற்சவத்தைக் கொண்டாடினார்கள். இந்த சிதம்பரத்தில் அன்றைக் குழந்தை முதல் முதியோர் வரையில் இடைவிடாது நமது சக்கிரவர்த்தினியார் அவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள் அன்று ஊரெல்லாம் சலஜகள் தெளித்து திருக்கோலமிட்டு தோரணம் கட்டி சிங்காரிக்கப்பட்டிருந்தது.

அன்று காலை 6 மணிக்கு இந்தவூரில் உள்ள எல்லாக் கவர்மெண்டு உத்தியோகஸ்தரும் மற்றைய கனவான்களும் இந்த உற்சவம் நிறைவேற்ற வேண்டிய சப்கமிட்டியாரும் ம-ா-ா ஸ்ரீ தாசில் வராகையங்கார் அவர்கள் கிரகத்தில் கூடி மகாகனம்பொருந்திய நமது சக்கிரவர்த்தனியாருக்கு மரியாதையாய்ப்பல வெடிகள் தீர்ந்து ஊர்கோல வரிசையாய் சின்னமேளம் பெரிய மேளம் முதலிய திருக்கோலங்களுடன் வீதிப் பிரதக்ஷணமாய் வந்து முதலில் காட்டுக்கோட்டை ம-ா-ா- ஸ்ரீ ரா. ம-சு- ராமஞ்செட்டியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவேதசாஸ்திர தரங்கணி யென்னும் சம்ஸ்கிருத பாடசாலைக் குச்சென்றார்கள். அங்கு சென்று அப்பாடசாலையில் படிக்கும்மாணுக்கருள் ஒருவரான ஹாலாசியநாத சாஸ்திரி யென்பவர் வேண்டுகோளின்படி சுமார் அரை மணி காலம் அவரியற்றிப்படித்த நமது காருண்ணிய சக்கிரவர்த்தினியா ரவர்களின் வந்தன பத்திரிகையைக் கேட்க ஒப்புக்கொண்டார்கள். அதேசமயத்தில் அப்பாடசாலைத் தலைமை உபாத்தியாயராகிய ஸ்ரீமான் வைத்தீசுவர சாஸ்திரிகள் அவர்கள் கேட்டுக்கொண்டபடி சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரான கும்பகோணம் பிர்ம்ம ஸ்ரீ ஸ்ரீநிவாசசாஸ்திரிகளவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, பல சுதேச கனவான்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், மற்றும் சில சுதேச பண்டிதர்களும் கூடிய மகாசபையின்கண் நமது சக்கிரவர்த்தினியா ரவர்களுடைய மேலான கனத்திற்குக் கீழ்க்கண்ட ஹாலாசியநாத சாஸ்திரிகளவர்களால் வந்தனோபசார பத்திரிகை அளிக்கப்பட்டது. உடனே அக்கிராசனாதிபதியாகிய ப்ரம்மவித்தியா பத்திராதிபர் எழுந்து மேற்குறித்த சம்ஸ்கிருத வந்தனோபசார பத்திரிகையின் பொருளைத் தமிழில் நன்குவிளக்கி அப்பாடசாலையின் வரலாற்றையும் பிள்ளைகளின் திறமையையும் சிறிதுரைத்தெடுத்து பின்னும் அப்பாடசாலை வரவேண்டிய சீர்திருத்தங்களைக் குறித்தும் சிலவிஷயங்களை எடுத்துரைத்தார். உடனே சிதம்பரம் டிஸ்டிரிக்ட் முன்சிப் மல்லாரிராவ் பி. ஏ. அவர்கள் எழுந்து சபையாரைநோக்கி இங்கிலீஷ் பாஷையில் சம்ஸ்கிருத பாஷையின் பெருமையைப் பற்றியும் ஷெ ஸ்ரீநிவாசசாஸ்திரியவர்கள் கூறினபடி இப்பாடசாலையை சீர்திருத்தத்துக்குக் கொண்டுவர வேண்டியதைப்பற்றியும், அவ்விதம் செய்வது நமது காருண்ணிய சக்கிரவர்த்தினி யவர்களுடைய சந்தோஷத்திற்கு இடமாகுமென்று தாம் எண்ணுவதாயும், தமது மேலான அபிப்பிராயத்தை வெளியிட்டனர். பிறகு வந்தனோபசார பத்திரிகை யளித்த ஹாலாசியநாத சாஸ்திரிகளைக்குறித்தும் அதற்குப் பொருளுரைத்து மற்றும் சில விஷயங்களை யெடுத்து உபன்னியசித்த பத்திராதிபரைக் குறித்தும் நமது விஷயத்தை அனுபோதித்த ம-ா-ா- ஸ்ரீ முனிசீப்தார் அவர்களுடைய மேலான அபிப்பிராயத்தைக் குறித்தும் வைக்கீல் என். ஸ்ரீநிவாஸாசாரியார் மிகப் புகழ்ந்து பேசினார். உடனே படிக்கும் பிள்ளைகளுக்கு சக்கரை வாழைப்பழம் புஷ்பம் முதலானது மளிக்கப்பட்டன. பிறகு அவ்விடம் விட்டு அதே வீதியில் ம-ா-ா- ஸ்ரீ வெ. ச. சபாபதிச் செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸம்ஸ்கிருத பாடசாலையை நோக்கி யெல்லோரும் முற்கூறிய கோலத்துடன் செல்ல அங்கும் அவ்விடத்தில் படிக்கும் மாணுக்கருள் ஒருவர் நமது மகாராணி அவர்களின் ஆக்ஷியின் பெருமையை ஓர் செய்யுளிலடக்கி மிகத்தெளிவாயுரைத் தனர். பின்பு அவ்விடத்திலும் கீழ்க்கண்ட பத்திராதிபர் அங்கு படிக்கும் பிள்ளைகளின் திறமையைக் குறித்தும் அவ்விடத்தில் படிக்கும் பிள்ளைகளின் பாஷாஞானத்தைப்பற்றி தாம் செய்த விரண்டு பரிக்ஷைகளால் மிக வியப்படைந்ததாகவும் இனி அப்பாடசாலையில் செய்யவேண்டிய பல விஷயங்களில் அப்பாடசாலையின் போதகாசாரியரான ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரியின் விடாமுயர்ச்சியையும், இவ்வித சௌரியங்கள் நமது மகாராணியின் ஆக்ஷியின் பெருமையென்னும் விரைவில் சுருக்கமாய் சுமார் பத்து நிமிஷம் பேசினார் பிறகு பிள்ளைகளுக்கு முற்பாடசாலை போலவே மரியாதைகள் செய்யப்பட்டன- பிறகு பச்சயப்பா ஹைஸ்கூலுக்கு அனைவரும் சென்று அங்கும் பிள்ளைகளுக்கு முற் கூறியவாறு செய்தார்கள். அங்கும் அப்பாடசாலைப் பிரதான உபாத்தியாயரான வரப்பிரசாத சாமிநாத ஜடாவல்லபர் பி. ஏ. அவர்கள் இங்கிலீஷ் பாஷையில் சிதம்பரம் ஜுபிலி சப்கமிட்டியார் யேற்படுத்திய ஏற்பாட்டையும் நமது மேன்மை தங்கிய காருண்ணிய சக்கிரவர்த்தினி யவர்களது பெருமையையும் அவர்களுக்கு இந்துதேசத்தார் அதிலுள்ள அன்பையும் யெடுத்து வியந்து பேசி வந்தவர்களுக்கு வந்தனமளிக்க, முற்கூறிய பத்திராதிபரெழுந்து படிப்பின் பிரயோசனம், ராஜபக்தி, சுதேச விசுவாசம், பகுத்தறிவு, பொது நன்மை இவைகளே என்றும் அவ்வித விஷயங்களைத் தவறாமல் உங்கள் படிப்பின் பிரயோசனமாக்கிக் கொள்ளவேண்டுமென்றும் படிப்பின் பிரயோசனம் பணம் ஒன்றேயல்லவென்றும் ஒருவாறு இதே விஷயத்தை நமது ரிப்பன் பம்டாய்மா நகரத்தில் எடுத்துபேசினார் என்றும், தற்காலம் நடக்கும் உற்சவம் நமதரா